www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 019

19 மே 2010

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# நரியாசனம் ஏறிய நரிகேசி உருத்திரகுமாரன்



23ஆவது புலிகேசிப் படம் பார்த்த உறவுகளுக்கு நகைச்சுவை நாயகன் வடிவேல் அரச உடை அணிந்து வலம்வந்த காட்சி நன்கு நினைவில் இருக்கும். ஒரு நடிகனாக இருந்தபோதும் தமிழீழ மக்களுக் காகக் குரல்கொடுத்து வரும் ஒருவர் நடிகர் வடிவேலு.



ஆனால் தமிழீழ மக்களின் விடுதலைக்காகக் குரல்கொடுப்பதாகக் கூறிக்கொண்டு நடிக்கும் உருத்திரகு மாரன் என்ற நரிகேசி மன்னர்களின் உடை அணிந்தால் எப்படியிருக்கும்? கற்பனை செய்துபாருங்கள் உறவுகளே! உம்... உம்... உம்... க... க... க... போதான்.

இன்று (திங்கட்கிழமை) அமெரிக்காவில் நரிகேசி உருத்திரகு மாரனின் தலைமையில் நாடுகடந்த குழுவின் கூட்டம் தொடங்கியது. பட்டு வேட்டியும், பட்டுப் பீதாம்பரமும் அணிந்து ஏதோ மன்னன் என்ற நினைப்பில் நரியாசனம் ஏற முற்பட்ட நரிகேசியின் கனவு விடிய முன்னரே கலைந்துவிட்டது.

எல்லோரையும் அமெரிக்காவுக்கு அழைத்து தனது தலையில் தங்கக் கிரீடம் சூட முற்பட்ட நரிகேசியின் கனவு, இப்போது வெறும் கனவாகி வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சட்டையும் அணிந்து விதவைக்கோலம் பூணும் நிலைக்கு வந்து விட்டது.

சந்திர மண்டலத்தில் ஒரு குழுவும், செவ்வாய்க் கிரகத்தில் ஒரு குழுவும், பூமியில் ஒருகுழுவின் செய்கோள் வழியாகக் கதைப்பது போன்று நாடு கடந்த 'அரசவையின்' இன்றைய அமர்வு அமைந்திருந்தது. அதுவும் வாடகைக்கு எடுக்கப்பட்ட மண்டபத் தில்தான் கூட்டம் நிலைமை இப்படியிருக்க, நாடுகடந்த அரசு தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் கை களில் கிட்டியிருப்பது கோத்தபாய ராஜ பக்சவிற்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தி யிருப்பதாக அரசல்புரசலாக தகவல்கள் கசிகின்றன. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பும் நோக்க த்துடன் தன்னால் நிறுவப்படவிருந்த நாடுகடந்த அரசு, வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது போன்று உருத்திரகுமார னைத் தாக்கியிருப்பது கே.பியையும் சீற்றத்திற்கு உள்ளாக்கியிருக்கின்றது. இது தொடர்பாக தனது சீடர்களுடன் தொடர்பு கொண்டு கே.பி. சீறிப் பாய்ந்தி ருப்பதாகத் தெரியவருகின்றது.



"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லிங்கம் சகோதரர்களின் சாதனை

இலண்டனில் நாடுகடந்த அரசில் போட்டியிட்ட இலக்கம் 411ற்குரிய சொக்கலிங்கம் யோகலிங்கம் எனப்படும் நபர் ஜி.ரி.வியில் உள்ள கருணைலிங்கத்தின் சகோதரர் என்பது குறிப்படத்தக்கது.

இன்னுமொரு சகோதரரான சுவிசில் உள்ள புலிக்குட்டி என்ற புண்ணாக்கு புளொட் அமைப்பைச் சேர்ந்தவன். இப்புலிக்குட்டி ஊடாகவே ஜி.ரி.விக்கு சிறீலங்கா அரசின் அன்பளிப்புக்கள் வருகின்றன.

இவர்கள் மூவரும் தமிழர் கட்டமைப்புக்குள் புகுந்து தமது நாசகார வேலைகளை செய்து சம்பந்தப்பட்ட இடங்களில் இருந்து அன்பளிப்புக்களை பெற்றுக் கொள்கின்றனர்.

இத்துடன் உள்ள படத்தை பாருங்கள் தெரியும் இவர்களின் பம்மாத்து. மேலும் தகவல் அறிய வெளியீடு இலக்கம் 4ஐ பார்க்கவும்.








# மனோவின் இராஜியத்தில்...



பிரான்சில் கடந்த 5 ஆம் திகதி நாடு கடந்த அரசின் வெற்றி வேட்பாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தாமதமாக வந்த ஒரு பெண்மணி தேர்தல் ஆணைக் குழுவின் ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார். அவர், திருமதி மரியநாயகம் என்றும் அறிமுகப்படுத்தப்பட்டார்.

அவர்தான் தேர்தல் ஆணையகத்தின் சார்பாக வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினார். அந்தப் பெண்மணிக்கும் தேர்தல் ஆணையகத்திற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. வேலும்மயிலும் மனோகரனின் விசிறியான அவர் மனோகரனால் சார்சல் வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். அந்த ஒரே தகுதியுடன் தேர்தல் ஆணைக்குழுவின் சான்றிதழ் விநியோகிக்கும் அதிகாரியாகத் திடீரெனப் பதவியுயர்வு பெற்று, வெற்றி பெற்ற வேட்பாளர்களைக் குட்டி வைத்துள்ளார். இது விடயத்தில் மனோவுக்கு ஒரே குசியாம். இதே மனோதான் சமாதான காலப்பகுதியில் நாட்டுக்குச் சென்றபோது அங்கேயே நின்று பணிபுரியும்படி தலைமையால் கோரப்பட்டது. அப்போ தான் மீண்டும் பிரான்ஸ் சென்று மனைவியுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பதாக தெரிவித்து வந்ததும் மறைக்க முடியாது. இப்போ மனோவின் நாடுகடந்த அரசுக்கான பணியும் மனைவியுடன் கலந்தாலோசித்து முடிவெடுத்ததாக இருக்குமோ?




